1995 மே 3]

கொண்டிருக்கிறது. எனவே தமிழ் அரசு பத்திரிகையில் இப்போது வருவதைக் காட்டிலும் கூடுதலாக தினம் தினம் வருகின்ற ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி நல்ல திட்டங்களை மக்களுக்கு விளக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அரசின் சார்பிலே அரசின் செயல்பாடுகளை, தீட்டப்படுகின்ற திட்டங்களை மக்களுக்கு தெளிவாக மக்கள் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்களை தமிழ் அரசு பத்திரிகையின் மூலம் வெளியிடப்பட்டு வருகிறது. ஆகவே கவர்ச்சியான முறையிலே இந்த தமிழ் அரசு பத்திரிகையை இயக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 532, திரு. ஓ. எஸ். அமர்நாத், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்.

532—

மதுரையில் கலையரங்கம் கட்டுதல்

**48421—திரு. ஓ. எஸ். அமர்நாத்:*

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் கலையரங்கம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஓ. எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே சென்னை, கோவை போன்ற முக்கிய நகரங்களில் அரசு சார்பாக கலை அரங்கங்கள் இருக்கின்றன. மதுரை நகரம் ஒரு முக்கியமான நகரமாகும். இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய திட்டங்களையும் செயல்பாடுகளையும்

மக்களுக்கு வெளிப்படுத்துகின்றபோது, அரசுக்குச் சொந்தமான கலை அரங்குகள் இல்லாத காரணத்தால் தனியார் கலை அரங்குகளில் நடத்தப்படுகிறது. மேலும் முக்கியமான அரசியல் தலைவர்களுடைய பிறந்தநாள் விழா அல்லது சமூகத் தலைவர்களுடைய பிறந்த நாள் விழா போன்ற விழாக்களை எடுக்கின்ற நேரத்திலே தனியாருடைய கலை அரங்குகளில்தான் சம்பந்தப்பட்ட இலாக்காவால் அந்த விழாக்கள் ஏற்பாடு செய்யப்படுகிறது. இப்படி தனியார் அரங்குகளிலே விழாக்களை ஏற்பாடு செய்தால் இந்த அரசுக்கு நிறைய பொருள் செலவு ஆகிறது. இதை கருத்திற் கொண்டு, கடந்த முறை மதுரையிலே நடந்த சித்திரை பொருட்காட்சி விழாகூட தனியார் இடத்திலே நடந்தது. அதேபோன்று, கடந்த ஆண்டு, இதற்கு முன்பு, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுடைய பிறந்தநாள் விழாவில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கலந்து கொண்டார். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களும் கலந்து கொண்டார். கோரிப்பாளையத்தில், வெட்டவெளியிலே, ரோட்டிலே அந்த விழா நடந்தது. ஆகவே, இதையெல்லாம் கருத்திற்கொண்டு, மதுரையிலே—நம்முடைய பேரவைத் தலைவர் இருக்கிற மதுரையிலே—மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களும் இருக்கிறார். அரசு விழாக்கள் நடக்கின்ற நேரத்திலெல்லாம், இந்தத் தனியார் அரங்கங்களில் நடத்துவதால், அரசுக்கு ஏற்படும் பொருள் செலவைக் கருத்திற்கொண்டு, மதுரையிலே உடனடியாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கலையரங்கத்தை ஏற்படுத்தித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சம்பந்தப்பட்ட அமைச்சரே பெரும்பகுதி அங்கேதான் இருக்கிறார்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அமர்நாத் அவர்கள் மதுரையிலே, கலையரங்கம் இல்லை; மற்ற தலைநகரங்களிலே, கோவையிலே, திருச்சியிலே இருக்கிறது என்று சுட்டிக்காட்டினார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் தெரியும்; அங்கே தமுக்கத்தில், மாநகராட்சிக்குச் சொந்தமான கலையரங்கம் இருக்கிறது. அரசு விழாக்கள் கலையரங்கத்தில் நடத்தப்பட வேண்டுமென்று உறுப்பினர் இங்கே சுட்டிக்காட்டினார். இந்த அரசைப் பொறுத்தமட்டில், அரசு விழாக்களை நடத்துகிறபோது, இந்த நாட்டிற்காக உழைத்த

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1995 மே 3]

நல்லவர்களின் நினைவாக, அந்த விழாக்களை நடத்துகிறபோது, கலையரங்கத்தில நடத்தக்கூடாது; பொது இடத்தில் நடத்தப்பட வேண்டுமென்றுதான் முடிவெடித்து இருக்கிறது. பொது இடத்தில் நடத்தினால்தான், மக்களுக்குத் தெரியும். கலையரங்கத்தில் நடத்தினால், குறிப்பிட்டவர்களுக்கு மட்டும்தான் தெரியும். ஆகவே, 'தமுக்கம் கலையரங்கம்' இருக்கிறது. செய்தித் துறையின் சார்பில், வேலூரிலே அண்ணா கலையரங்கம் இருக்கிறது. சென்னையிலே கலைவாணர் அரங்கம் இருக்கிறது. மதுரையிலே, மாநகராட்சிக்குச் சொந்தமான கலையரங்கம் இருக்கிற காரணத்தினால், செய்தித் துறையின் சார்பிலே, கலையரங்கம் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினருக்கு இருக்கிற ஆசையெல்லாம் அவர்களுக்கென்று சொந்தமாக அது இருக்கவேண்டுமென்பதுதான்.

திரு. ஓ.எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிக்குச் சொந்தமான கலையரங்கம் இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மதுரையிலே எத்தனையோ அரசுக்குச் சொந்தமான நிலங்கள், மதுரை நகரத்திலேயும், அதற்குச் சுற்றுப்புறங்களிலேயும் இருக்கின்றன. புறம்போக்கு நிலங்கள் நிறைய இருக்கின்றன. எனவே, அதனைக் கருத்திற்கொண்டு, தனியார் நிலங்களைக் கொடுக்க முன்வந்தால், இந்த அரசு கலையரங்கம் கட்டிக் கொடுக்க ஆவனசெய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாநகராட்சி, நகராட்சி போன்ற இடங்களில், உள்ளாட்சித்துறையைச் சார்ந்த அமைப்புகளின் சார்பிலே, கலையரங்கங்கள் கட்டப்பட்டு வருகின்றன. செய்தித் துறையின் சார்பிலே, கலையரங்கம் கட்டுவதற்கு நிதிநிலை இடம் தராது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, உலகத் தமிழ் மாநாட்டின்போது, சிறுவர் குழந்தைகளுக்கான ஒரு கலையரங்கம், 25 இலட்சம் ரூபாய் செலவிலே கட்டப்படுமென்று அறிவித்தார்கள். ஆனால், அன்றைக்கு நிதிநிலை இல்லாத காரணத்தினால், அது கட்டப்படவில்லை. அந்த நிலைதான் இன்றைக்கும் தொடர்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.